**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.118/2024
Prosecution witness.06

| | |
|---|---|
| பெயர் : கோபால் லெட்சுமி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day of February 2025.

03.03.2025

(எதிரிகள் 2 மற்றும் 3 ஆஜர், 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 27.03.2024ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் 1ம் எதிரி முனியசாமி, 2ம் எதிரி மணிகண்டன், 3ம் எதிரி ராமச்சந்திரன், இளம்சிறார் பிரவின் ஆகியோர் அசா.1 அங்கதனை பார்த்து தேவ்டியாமவனே என்று அசிங்கமாக

பேசினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி முனியசாமி இரும்பு பைப்பால் அசா.1 அங்கதனை இடதுபக்க நெஞ்சில் மற்றும் வலது பக்க முதுகில் காயம் ஏற்படுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் எதிரி மணிகண்டன், 3ம் எதிரி ராமச்சந்திரன், இளம்சிறார் பிரவின் ஆகியோர் அசா.1 அங்கதனை கட்டை கம்பால் உடம்பில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2)1ம் எதிரி முனியசாமி, 2ம் எதிரி மணிகண்டன், 3ம் எதிரி ராமச்சந்திரன், இளம்சிறார் பிரவின் ஆகியோர் அசா.1 அங்கதனை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. கீழத்தூவல் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுடன் செய்துகொண்ட சமாதானத்தால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.